# கலைஞானபூரணன் கொலின்ஸ்

பாத்திரத்திற்கு உயிர்கொடுத்து நடிப்பவர் எனப் பிரபல சிங்கள நாடகக் கலைஞர் எதிர்வீர சரத்சந்திராவினாலும் அருமையாகத் தமிழ் பேசி நடிப்பவர் என்று பேராசிரியர். கா.சிவத்தம்பியாலும், எல்லாளன் பாத்திர நினைவுடன் திரும்பிச் செல்கிறேன் என்று தமிழகத்துப் பேராசிரியர் அடைக்கலசாமியாலும், தற்போதைய கலைஞர்களில் முக்கியமானவர் என ஈழத்து நாடகப்பேராசான் குழந்தை சண்முகலிங்கத்தாலும் புகழப்பட்ட பாசையூரைச் சேர்ந்த பிரான்சிஸ் யூல்ஸ் கொலின்ஸ் அவர்களைப் பதிவு செய்வதில் 'ஆழத்து முத்துக்கள்' பெருமை கொள்கிறது.

கடல் அலை தாலாட்டும் பாசையூர் மண்ணில் ஒரு பெரும் கலைக் குடும்பத்தின் வாரிசாக டிசம்பர் 23, 1955ல் இவர் பிறந்தார். இவரது அம்மாவின் தந்தையார் அண்ணாவியார் முத்துத்திரை அலெக்சாண்டர், மாமனார் பபூன் அலெக்சாண்டர், இவரது தந்தையார் குழந்தை என்ற யோசெப்பு பிரான்சிஸ் எல்லோரும் புகழ் பூத்த நாடகக் கலைஞர்கள்.

தனது பத்தாவது வயதில் பாசையூர் அந்தோனியார் கோயில் முன்றலில் மேடையேறிய 'பத்துக் கட்டளைகள்' என்ற நாடகத்தில் நடித்ததன் மூலம் நாடகவுலகில் கால்பதித்தவர். இதன் பின்னர் காலத்தால் அழியாதது, தரகர் தம்பிமுத்து, சிதறிய முத்துக்கள், மறுமலர்ச்சி போன்ற நாடகங்களில் பிரதான பாத்திரங்கள் ஏற்று இவர் நடிக்கத் தொடங்கினார்.

ஒருமுறை மூத்த கலைஞர்களுடன் இலங்கை வானொலியின் கலையகத்துக்கு சிறுவனாக இருந்த கொலின்சும் சென்றிருந்தார். கிளியோபட்ரா நாட்டுக்கூத்து அங்கு ஒலிப்பதிவு செய்யப்பட்டது. அப்போது கலையகத்துக்கு வெளியே பாடிக்கொண்டிருந்த கொலினிசின் திறமையைப் பாராட்டிய வானொலித் தயாரிப்பாளர் கே.எம். வாசகர் இவருக்கும் ஒரு பாத்திரம் கொடுத்துப் பாடவைத்தார்.

தந்தையார் யோசெப் பிரான்சிஸ், ஆரம் மாஸ்டர் ஆகியோரை ஆரம்பகால குருவாகப் போற்றும் கொலின்ஸ் மனோகரா, அம்பிகாபதி, வீரபாண்டிய கட்டப்பொம்மன், அனார்க்கலி போன்ற அவர்களது நாடகங்களில் நடித்துச் சிறப்புச் செய்துள்ளார்.

இதன் பின்னர் நண்பர்களுடன் இணைந்து சாந்தி நாடக மன்றம், ஒளிமலர் நாடக மன்றம், உதயசூரியன் நாடக மன்றம் என்பவற்றை ஸ்தாபித்து காதலா கடமையா, எது வாழ்வு, வாழ முடியாதவன், தீபம், தங்கப்பதக்கம், பாவத்தின் பரிசு போன்ற சமூக நாடகங்களிலும் மேலும் சாம்பிராட் அசோகன், மனோகரா, மணிமகுடம், திருவிளையாடல் ஆகிய அரச நாடகங்களிலும் பிரதான பாத்திரங்களை



ஏற்று நடித்தார். இவை தவிர, அந்நாட்களில் நாட்டில் நடக்கும் சம்பங்களை வைத்து 'காசியக் கலம்பகம் 1', 2 என்று 5 வரை மேடையேற்றி மக்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார்.

இந்நாட்களில் புலவர் தட்சணாமூர்த்தி வீடியோ படமாக உருவாக்கிய பூதத்தம்பி என்ற நாட்டுக்கூத்தில் ஞானப்பிரகாசர் பாத்திரம் ஏற்ற கொலின்ஸ் அப்பாத்திரத்துக்கு உயிரூட்டினார். இவருடன் வி.கே. ராஜரட்னம், கமிஷனர் சிவஞானம், வி.ரி.ஏ. விஸ்வா, சதா ஸ்ரீநிவாசன், நாவலியூர் செல்லத்துரை ஆகியோரும் நடித்திருந்தனர். பூதத்தம்பி வீடியோ வெளியீடு நாவலர் கலாசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

கொலின்சின் ஆற்றலைக் கண்டுகொண்ட திருமறைக்கலாமன்றத்தின் இயக்குனர் அருட்தந்தை சவரிமுத்து அவர்கள் இவரை மன்றத்தில் இணைத்துக்கொள்கிறார். இதனைத் தொடர்ந்து கொலின்சின் ஆற்றலும் செயற்பாடுகளும் வேறு பரிமாணங்களைத் தொட்டன.

திருமறைக் கலாமன்றத்தில் இணைந்த நாளிலிருந்து இன்று வரை மன்றம் வருடா வருடம் நடத்துகின்ற திருப்பாடுகளின் காட்சியில் கொலின்ஸ் பங்குபற்றி வருகிறார். மேலும் திருமறைக் கலாமன்றம் நடத்திய இரண்டு வருட நாடக கற்கை நெறியில் பயின்று நாடக நுணுக்கங்களையும், ஆட்ட முறைகளையும்



கற்றுக்கொண்டார். குழந்தை சண்முகலிங்கம், சி. மௌனகுரு, சிதம்பரநாதன், காரை செ.சுந்தரம்பிள்ளை போன்றோரின் கற்பித்தலில் நடைபெற்ற நாடக கற்கைநெறியில் கொலின்ஸ் அதிவிசேட சித்தி பெற்றார். இவருடன் நாடகக் கலைஞர்கள் ஜெய்சங்கர், ஸ்ரீகணேசன், அகிலன் ஆகியோரும் அதிவிசேட சித்தி பெற்றிருந்தனர். இந்தக் கற்கைநெறியின் முடிவில் இடம் பெற்ற 'பொறுத்தது போதும்' நாடகத்தில் சம்மாட்டியார் பாத்திரம் ஏற்ற கொலின்ஸ் நடிப்பால் அனைவரையும் அசரவைத்தார்.

பேராசிரியர் சி. மௌனகுருவிடம் வடமோடி ஆட்டங்களையும், காரை.செ.சுந்தரம்பிள்ளையிடம் தென்மோடி ஆட்டங்களையும், அருட்தந்தை லம்பேட் அவர்களிடம் மன்னார் ஆட்ட வடிவங்களையும் கொலின்ஸ் கற்றுக்கேர்ந்தார். மேலும் அசாத்திய கலைஞன் பிரான்சிஸ் ஜனம், அண்ணாவியார் பாலதாஸ் ஆகியோரிடம் நடிப்புக் கலையின் நுணுக்கங்களை அறிந்து கொண்டதாக இவர் குறிப்பிடுகிறார்.

திருமறைக் கலாமன்றத்தில் இவர் பெற்ற நாடகப் பயிற்சியைத் தொடர்ந்து மன்றம் மேடையேற்றிய நாட்டுக்கூத்துக்கள் இசை நாடகங்கள் பலவற்றில் இவர் முக்கிய பங்கேற்றார். நீ ஒரு பாறை, அனைத்தும் அவரே, மயான காண்டம், ஏழுபிள்ளை நல்லதங்காள், சீவக சிந்தாமணி, வளையாபதி, சத்தியவான் சாவித்திரி, ஞானசௌந்திரி என்பன இங்கு குறிப்பிடத்தக்கவை. சிறந்த பாத்திரப் படைப்புகளுடனும், பிரமாண்டமான மேடை அமைப்புடனும் மேடையேறிய 'அனைத்தும் அவரே' நாடகம் இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது நினைவு கொள்ளத்தக்கது.

அடுத்ததாக கும்பகர்ணனின் கதையை 'கொல் ஈனும் கொற்றம்' என்ற பெயரில் திருமறைக் கலாமன்றம் நாடகமாக மேடையேற்றியது. எல்லா ஆட்ட வகைகளும் பயன்படுத்தப்பட்ட இந்நாடகத்தை கலைஞர் ஜோன்சன் ராஜ்குமார் நெறியாள்கை செய்திருந்தார். இதுவே கொலின்ஸ் நடித்த 100வது நாடகமாகும். கூத்து, இசை மற்றும் சமூக நாடகங்கள் என்று பன்முக ஆற்றலை வெளிப்படுத்தும் நூறு நாடகங்களில் நடிப்பது என்பது சாதாரண சாதனையல்ல.

'கொல் ஈனும் கொற்றம்' நாடகம் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் மேடையேறியதைத் தொடர்ந்து அங்கு ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. பேராசிரியர்களும், பெரும் நாடக விற்பன்னர்களும் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் 'தமிழனுக்கென்ற கலை வடிவம் வடமோடி, தென்மோடி போன்று பல பிரிவுகளாக உள்ளன. ஆகவே ஆட்டவகைகள் அனைத்தையும் இணைத்து ஒரு வடிவமாக கொள்வோம். அதனை கூத்துருவ நாடகம் என்று அழைப்போம்' என்ற கருத்தை கொலின்ஸ் முன்வைத்தார்.

இதன் பிரகாரம் புறநானூற்றுக் கதை ஒன்றை 'அற்றைத்திங்கள்' என்ற கூத்துருவ நாடகமாக திருமறைக் கலாமன்றத்தினர் மேடையேற்றினர். ஜோன்சன் ராஜ்குமார் நெறியாள்கை செய்த இந்நாடகத்தில் கொலின்ஸ் முக்கிய பாத்திரத்தில் நடித்திருந்தார். இந் நாடகம் 20 தடவைகள் (பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபம் உட்பட) மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து 'திருச்செல்வர் காவியம்', மற்றும் யுத்தம் வேண்டாம் என்பதை வலியுறுத்தும் 'அசோகா' ஆகிய மௌன நாடகங்களில் கொலின்ஸ் பங்கு கொண்டு தன் நடிப்புத் திறனுக்குச் சிகரம் அமைத்தார். சிங்களப் பகுதிகளில் மேடையேற்றப்பட்ட திருமறைக் கலாமன்றத்தின் இந்நாடகங்களை போரில் அவயங்களை இழந்த இராணுவ வீரர்களும் பார்த்தது நினைவு கொள்ளத்தக்கது.

இதன் நீட்சியாக சிங்கபாகு, மனமே போன்ற சிறந்த நாடகங்களை நெறியாள்கை செய்த எதிர்வீர சரத்சந்திர அவர்களுடன் இணைந்து திருமறைக் கலாமன்றம் 'தர்சனா' என்ற மௌன நாடகத்தை மேடையேற்றியது. இந்நாடகத்தில் எல்லாளனாக கொலின்சும் துட்டகைமுனுவாக சிங்களக் கலைஞர் ஜகத் என்பவரும் நடித்திருந்தனர். பேராதனைப் பல்கலைக்கழகம் போன்ற பல இடங்களில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது.

## ஆழத்து முத்துக்கள் 106

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

திருமறைக் கலாமன்றத்தினர் தொண்ணூறுகளில் மேற்கொண்ட இரண்டு ஐரோப்பியக் கலைச் சுற்றாலாக்களில் பங்குபற்றிய கொலின்ஸ் பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, சுவிஸ்லாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் சகுந்தலை, ஜெனோவா, அரிச்சந்திரா, சோழன்மகள், ஜீவப்பிரயத்தனம் போன்ற நாடகங்களில் தன் நடிப்பாற்றலை சிறப்புற வெளிப்படுத்தினார்.

இவ்வாறு திருமறைக் கலாமன்றத்தின் நாடகங்களில் நடிக்கும் அதே காலகட்டத்தில் பாசையூர் வளர்பிறை நாடக மன்றத்தின் நாடகங்களிலும் கொலின்ஸ் பங்குபற்றி வருகிறார். தீர்க்கசுமங்கலி, கண்டி அரசன், சகுலன் சின்னப்பர், புனித அந்தோணியார், முத்தா மாணிக்கமா போன்றவை இவற்றில் சிலவாகும். அண்ணாவியார் பாலதாஸ் அந்நாட்களில் ஏற்ற பாத்திரங்களைத் தற்போது கொலின்ஸ் ஏற்று நடித்துப் பெருமை சேர்க்கிறார்.


தற்போது கொலின்ஸ், கல்லூரி மாணவர்களுக்காக நாடகங்களை நெறியாள்கை செய்து மேடையேற்றி வருகிறார். அந்தவகையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களுக்காக சகுந்தலை, சோழன் மகள் மற்றும் திருக்குடும்ப கன்னியர்மட மாணவிகளுக்காக மனுநீதிச் சோழன், பாசையூர் சென். அன்ரனிஸ் மகாவித்தியாலய மாணவர்களுக்காக ஞானசௌந்திரி, அருளானந்தன், முத்தா மாணிக்கமா, துருப்பிடித்த தூண்டில்கள், நீதியின் இருக் கைகள் ஆகிய இசை, சிந்துநடை மற்றும் சமூக நாடகங்களை கொலின்ஸ் நெறியாள்கை செய்திருந்தார்.

மேலும் இடம்பெயர்ந்த நாட்களில் இலுப்பக் கடவை என்ற இடத்தில் மயான காண்டம், அன்னை வேளாங்கன்னி ஆகிய நாடகங்களையும் மேடையேற்றினார். இவை தவிர ஒளிவிழா நாடகங்களைத் தயாரிப்பதோடு தேவாலயங்களில் கூடு சுற்றும் போது படிக்கப்படும் நடைசாரிப் பாடல்களைப் பழக்குவதிலும் இவர் ஈடுபட்டு வருகிறார்.

தனது மனைவி மேரி சிசில் மற்றும் மூன்று பிள்ளைகளினதும் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் இருப்பதால் தான் இந்த நாடகவுலகம் தனக்குச் சாத்தியமானதாக கொலின்ஸ் குறிப்பிடுகிறார். அண்மையில் இவரது மூன்றாவது மகன் செஸ்டஸ் சத்தியவானாகவும், இவர் யமதர்மனாகவும் தோன்றி நடித்த தீர்க்க சுமங்கலி நாடகம் அடுத்த தலைமுறைக்கான படிக்கல்லாக அமைந்துவிட்டது.

இத்துனை சிறப்புகள் வாய்ந்த எமது கலைஞன் கொலின்ஸ் அவர்களின் கலை அர்ப்பணிப்புக்காகத் திருமறைக் கலாமன்றத்தினர் 'கலைஞானச் செல்வன்,' 'கலைஞானபூரணன்' ஆகிய விருதுகளையும், பாசையூர் பிரான்ஸ் அபிவிருத்திக் குழுவினர் 'பல்கலை ரத்னா' பட்டத்தையும், பாசையூர் கலையகத்தினர் 'நாடகக் கலாவித்தகர்' பட்டத்தையும் வழங்கி கௌரவம் செய்துள்ளனர்.

தமிழரின் பாரம்பரியமிக்க கூத்துருவ நாடகத்தின் சகல கூறுகளிலும் புலமை படைத்த கொலின்ஸ் நீடு வாழ்ந்து கலைக்கு மென் மேலும் சேவை செய்ய வாழ்த்துவோம்.



sriskandan@thaiveedu.com